# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## பொதுத்தேர்வு
## 2023
## வளர்தமிழ் 8

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. முல்லைத்தீவில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேயரின் கோட்டையினை ______________ படையணிகள் தாக்கி அழித்தன.

அ) சங்கிலியனின் ☐ ஆ) பண்டாரவன்னியனின் ☐
இ) எல்லாளனின் ☐ ஈ) கயிலைவன்னியனின் ☐

2. அவை + ஆல்

அ) அவையால் ☐ ஆ) அதனால் ☐
இ) அவற்றால் ☐ ஈ) அவைகளால் ☐

3. கார்காலத்தில் வீசும் காற்று

அ) கொண்டல் ☐ ஆ) தென்றல் ☐
இ) வாடை ☐ ஈ) கோடை ☐

4. கதையை நன்றாகக் கேளுங்கள்! இதில் இடம்பெறாத சொல்லிய உறுப்பு

அ) பயனிலை ☐ ஆ) அடைமொழி ☐
இ) செயப்படுபொருள் ☐ ஈ) எழுவாய் ☐

5. யானை பிளிறும். அதுபோல கரடி

அ) உறுமும் ☐ ஆ) குரைக்கும் ☐
இ) ஊளையிடும் ☐ ஈ) கத்தும் ☐

6. "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்..." எனப் பாடியவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) நாமக்கல்கவிஞர் ☐
இ) உருத்திரமூர்த்தி ☐ ஈ) பாரதியார் ☐

7. ஒன்றன்பால் ஒருமை வினைமுற்றுக்கு எடுத்துக்காட்டு

அ) விழுகின்றது ☐ ஆ) விழுகின்றன ☐

இ) விழுந்தான் ☐ ஈ) விழுந்தனர் ☐

8. ஐந்நூறு என்பதைப் பிரித்தெழுதினால்

அ) ஐந் + நூறு ☐ ஆ) ஐம்பது + நூறு ☐

இ) ஐந்து + னூறு ☐ ஈ) ஐந்து + நூறு ☐

9. கைலாயமாலை என்னும் நூலை இயற்றியவர்

அ) விபுலாநந்தஅடிகள் ☐ ஆ) ஆறுமுகநாவலர் ☐

இ) முத்துராயக்கவிராயர் ☐ ஈ) விவேகானந்தர் ☐

10. இலங்கையை ஆண்ட இறுதிச் சோழ மன்னன்

அ) குலோத்துங்கசோழன் ☐ ஆ) கரிகாற்சோழன் ☐

இ) இராசேந்திரசோழன் ☐ ஈ) சுந்தரசோழன் ☐

11. அணில்கள் கொய்யாப்பழங்களைக் கொறிக்கின்றன. இது

அ) கூட்டுச்சொல்லியம் ☐ ஆ) தனிச்சொல்லியம் ☐

இ) வினாச்சொல்லியம் ☐ ஈ) ஏவற்சொல்லியம் ☐

12. **குறள்:**

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை ________________ நன்று

அ) செய்யாமை ☐ ஆ) எய்யாமை ☐

இ) பொய்யாமை ☐ ஈ) அறியாமை ☐

13. தலைக்கு ஏழு ஈரோ கொடு. இதில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

அ) குணவாகுபெயர் ☐ ஆ) சினையாகுபெயர் ☐

இ) காலவாகுபெயர் ☐ ஈ) தொழிலாகுபெயர் ☐

14. அறிஞர்கள் கூடி எதிர் உரை செய்யும் அரங்கு

அ) ஒத்திகை ☐ ஆ) முன்னுரை ☐

இ) பட்டிமன்றம் ☐ ஈ) வெள்ளோட்டம் ☐

15. ஐயிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்தவன்

அ) அதியர்மான் ☐ ஆ) செங்குட்டுவன் ☐

இ) நெடுஞ்சேரலாதன் ☐ ஈ) இராவணன் ☐

16. "அட்டைக் கடியும் அரிய வழி நடையும்... " என்ற அடி உணர்த்துவது

அ) கனிவு ☐ ஆ) நிமிர்வு ☐

இ) கழிவிரக்கம் ☐ ஈ) வீரம் ☐

17. தோற்செருப்பு என்பது

அ) கெடுதற்புணர்ச்சி ☐ ஆ) தோன்றற்புணர்ச்சி ☐

இ) திரிதற்புணர்ச்சி ☐ ஈ) இயல்புப்புணர்ச்சி ☐

18. உலகப்பொதுமறை எனப் போற்றப்படுவது

அ) நாலடியார் ☐ ஆ) நன்னெறி ☐

இ) கொன்றைவேந்தன் ☐ ஈ) திருக்குறள் ☐

19. வெளிப்படையாகப் பேசுபவனைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) வாய்காட்டல் ☐ ஆ) தலைகவிழ்தல் ☐

இ) ஓட்டைவாயன் ☐ ஈ) ஓட்டைக்கையன் ☐

20. பழந்தமிழர் ____________ அடிப்படையாகக் கொண்டு தம் வாழ்வியலையும் அறிவியலையும் அமைத்துக் கொண்டார்கள்.

அ) ஞாயிற்றையும் புதனையும் ☐ ஆ) காற்றையும் மரத்தையும் ☐

இ) ஞாயிற்றையும் திங்களையும் ☐ ஈ) திங்களையும் புதனையும் ☐

21. நீணிலம் என்பதன் பொருள்

அ) மண்ணுலகம் ☐ ஆ) மழைமுகில் ☐

இ) கார் ☐ ஈ) விண்ணுலகம் ☐

22. குழந்தை தூக்கத்திலிருந்து விழித்தது. இச்சொல்லியம் உணர்த்துவது

அ) எல்லைப்பொருளை ☐ ஆ) ஒப்புப்பொருளை ☐

இ) நீங்கற்பொருளை ☐ ஈ) ஏதுப்பொருளை ☐

23. திவ்வியப்பிரபந்தம் ____________ சார்ந்தது.

அ) இசுலாமியநெறி ☐ ஆ) கிறித்தவநெறி ☐

இ) சைவநெறி ☐ ஈ) வைணவநெறி ☐

24. படிப்பான் என்பதில் வந்துள்ள இடைநிலை

அ) ப் ☐ ஆ) ஆன் ☐

இ) படி ☐ ஈ) பா ☐

25. நாங்கள் ஆண்டுதோறும் தாயகம் செல்வோம். இதில் தோறும் என்பது

அ) உரிச்சொல் ☐ ஆ) பெயர்ச்சொல் ☐

இ) இடைச்சொல் ☐ ஈ) வினைச்சொல் ☐

26. கேட்டனர் என்பதன் வினையடி

அ) கேட்டன ☐ ஆ) கேள் ☐

இ) கேட்டு ☐ ஈ) கேட்ட ☐

27. ஆடு மாடுகளின் கூட்டத்தை ______________ என்பர்.

அ) கும்பல் ☐ ஆ) தோப்பு ☐

இ) கூட்டம் ☐ ஈ) மந்தை ☐

28. இராசேந்திரசோழன் ______________ முடியையும் அணிகலன்களையும் கைப்பற்றுவதற்காக இலங்கை மீது படையெடுத்தான்.

அ) சேரரது ☐ ஆ) சோழரது ☐

இ) பாண்டியரது ☐ ஈ) பல்லவரது ☐

29. உருவக அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பவளவாய் ☐ ஆ) விற்புருவம் ☐

இ) மலர்க்கை ☐ ஈ) கண்ணம்பு ☐

30. விளிவேற்றுமை என்று அழைக்கப்படுவது

அ) 2ஆம்வேற்றுமை ☐ ஆ) 8ஆம்வேற்றுமை ☐

இ) 4ஆம்வேற்றுமை ☐ ஈ) 5ஆம்வேற்றுமை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தனக்கு நிகரான ஆற்றலுடையோரை எதிர்த்துப் போரிடுவதே வீரமும் நல்லியல்புமாகும். பண்டைத் தமிழ் மன்னர் பகைநாட்டின் மீது போர் தொடங்குவதற்கு முன்புகூட மாந்த நேயத்தைப் பேணி வந்துள்ளனர். அதனால் பகை நாட்டிலுள்ள மக்களுக்கும் போர் தொடங்கும் செய்திகளை பறை அறைந்து அறிவித்தனர். அதாவது போரோடு தொடர்பில்லாத அனைத்து மக்களும் காப்பரண்களைத் தேடிச் செல்லுங்கள். போரோடு தொடர்புடையோரும் படைவீரர்களுமே எம்மால் தாக்கப்படுவர் என்று பகைநாட்டு மக்கள் கூட துன்புறாமல் இருக்க வேண்டும் என்ற மாந்தநேய நோக்கில் பறையறைந்து போரிட்டனர். ஆனால் இன்றோ முன் அறிவிப்பு ஏதுமின்றி மாந்தநேயமற்ற வழியில் போரைத் தொடங்குகின்றனர். இப்போரினால் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் உயிர் இழக்கின்றனர். அவர்களின் சொத்துகள் அழிக்கப்படுகின்றன. மாந்தநேயமற்ற போரினால் மக்கள் அல்லற்பட்டு வாழவழியின்றி தம் வாழ்நாளைக் கழிக்கின்றனர். என்னே! இன்றைய உலகின் மாந்தநேயம்.

1. யாரை எதிர்த்துப் போரிடுவது வீரமும் நல்லியல்புமாகும்?

2. எதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர் இழக்கின்றனர்?

3. போர் தொடங்கும் செய்திகளை எவ்வாறு அறிவித்தனர்?

4. போரினால் மக்கள் தம் வாழ்நாளை எப்படிக் கழிக்கின்றனர்?

5. இன்று எவ்வாறு போரைத் தொடங்குகின்றனர்?

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. பண்டாரவன்னியனைக் காட்டிக் கொடுத்த இரண்டகன் யார்?

_______________________________________________

2. போர்த்துக்கேயர் வெற்றிலைக்கேணியில் கட்டிய கோட்டையின் பெயர் என்ன?

_______________________________________________

3. உள்ளம் எதனால் தூய்மையடையும் என வள்ளுவர் கூறுகின்றார்?

_______________________________________________

4. "உன்பாட்டில் மலர்வாய் நீ! - நான்
   என் பாட்டில் எழுதுகிறேன்" இக்கூற்று யாரால் எதற்குக் கூறப்பட்டது?

_______________________________________________

5. உழவர் திருநாள் என அழைக்கப்படும் தமிழர் திருநாள் எது?

_______________________________________________

6. பசித்து வரும் வழிப்போக்கர்களுக்கு உணவளிக்கும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

_______________________________________________

7. மிகப்பழமையான இலக்கண நூல் எது?

_______________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## உழவர் திருநாள்

| | | | | |
|---|---|---|---|---|
| உழைப்பது | திருநாளாம் | உழவனின் | மாந்தனுக்கு | நாளன்று |

அறுசுவை உணவு தரும்
அறுவடை ________________ அமிழ்தான பொங்கலாம்
உணவுப் பொருள் தேவையை உணர்த்த
உற்றதோர் பொங்கல் ________________

அறுவடை செய்து கொடுக்க
அல்லும் பகலும் ________________ உழவராம்
________________ மதிப்பை உலகிற்குக் காட்ட
உயரியதோர் உழவர் திருநாளாம்

உழவருக்கு நண்பனாய் உழைத்து
உறவுக்காரன் போல் இருப்பது மாடுகளாம்
மாடுகளின் பணியை ________________ ச் சொல்ல
மகிழ்வான மாட்டுப் பொங்கலாம்.

புள்ளிகள் 05

5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

அது ஓர் அழகான சிற்றூர். அங்கே பென்னம்பெரிய மலைகள் காணப்படுகின்றன. மலைகள் சரிந்து நிலத்துடன் இணையும் இடத்தைச் சாரல் என்று கூறுவர். சாரலில் வீழ்கின்ற நீர்வீழ்ச்சி சலசல என ஓடுகின்றது. அவ்விடம் நீர் வளத்தால் நிறைந்துள்ளது. பார்க்கும் இடமெல்லாம் மலர்கள் நிறைந்திருக்கின்றன. அருகே அழகான மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. மரத்தில் இருந்து குயில்கள் கூவுகின்றன. இக்காட்சியைக் காண ஊரே திரண்டு வருகிறது.

1. இரண்டாம் வேற்றுமை உருபேற்ற சொற்களை எழுதுக.

______________________________

2. இங்கு வந்துள்ள ஆகுபெயர் எவ்வகையென கண்டறிந்து எழுதுக.

______________________________

3. எழுவாய் அடைமொழி ஒன்று தருக.

______________________________

4. அஃறிணைப் பன்மைச் சொற்கள் இரண்டு தருக.

______________________________

5. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

புள்ளிகள் 10

ஆ) 1. பொருத்தமாக நிரற்கூட்டை நிறைவு செய்க.

| வினைச்சொற்கள் | வினையடி | காலம் |
|---|---|---|
| கொறிக்கின்றன. | | |
| தேடினான். | | |
| சென்றனர். | | |

புள்ளிகள் 03

2. பின்வரும் எச்சங்களை இனம் கண்டு எழுதுக.

கற்று ______________________

பழுத்த ______________________

புள்ளிகள் 02

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| ஒலி | ஒளி | அலகு | அழகு | ஆனி | ஆணி |
|---|---|---|---|---|---|

______________ மாதத்தில் கடும் வெப்பமாக இருக்கும். அதனால் மக்கள் கடற்கரைக்கு விரும்பிச் செல்வர். கடற்கரையில் ______________ நீண்ட நாரைகளும் கொக்குகளும் ஒற்றைக் காலில் மீன் பிடிக்க காத்துக் கொண்டிருந்தன. அங்கு ______________ மிகுந்த பல வண்ணப்பறவைகள் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. கதிரவனின் ______________ பட்டு கடல் நீர் தகதக என மின்னியது. கடல் அலைகள் எழுப்பும் ______________ பேரிரைச்சலாக இருந்தது. என்னே! அழகு இக் கடற்கரைக்காட்சி.

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நாம் ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உடற்பயிற்சி செய்வதனால், உடல் உறுதி பெறுகிறது. நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது. உடற்பயிற்சியினால் உள்ளமும் மகிழ்வடைகிறது. இது எங்கள் நலமான வாழ்விற்கு இன்றியமையாதது. நாள்தோறும் சிறிது தூரம் நடத்தல் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.**

* தன்னிடம் இருப்பதைத் தானறியாமை.
* திறமையின் ஆற்றல்.
* அடக்கமின்மை துன்பத்தைத் தரும்..
* கைக்கெட்டாதது பயனற்றது.
* முயற்சியின்றி உயர்வு இல்லை.

1. துள்ளினமாடு பொதி சுமக்கும்.

___

2. பாடின்றிப் பட்டமில்லை.

___

3. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

___

4. தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்குதவாது.

___

5. கையில் வெண்ணெயிருக்க நெய்க்கலையாதே

___

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ பண்டாரவன்னியன்
- ✸ தைப்பொங்கல்
- ✸ மழைநாள்
- ✸ தமிழ்மொழி

| புள்ளிகள் 15 |
|---|